செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஞூ மாசி மீ கரு உ வெள்ளிக்கிழமை (27-2-1976) [இல: ௬ச

## இலிங்கத்திலே தோற்றிய இரகசியமே

# சிவராத்திரிப் பரம இரகசியம்

## "எங்கே என்னைத் தேடுகின்றீர்கள்? -- இங்கே இருக்கின்றேன் நான்!"

(வித்துவான் மு. கந்தையா B. A.)

சிவபெருமான் விஸ்வரூபன், விஸ்வாதிகன், விஸ்வ சேவ்யன் விஸ்வ சங்கர் ஸ்வாமி என்கின்றது வடமொழி வேதம். 'எல்லா உலகமும் ஆனாய் நீயே"; 'தானலாதுலக மில்லை' என்கின்றது தமிழ் வேதம். எத்தனைதான் சொல்லியும் இந்த உண்மைகளிலே எங்களையொத்த எந்த மன்பதைக்கும் விசுவாசமோ விளக்கமோ விருப்பமோ ஏற்படுவது இயலாத காரியமாகத்தான் இருந்து வருகின்றது; அகத்திலே இருப்பதன்றிச் சகத்திலே சிவனிருப்பாரோ என்பது சற்றுச் சந்தேகமாகத்தான்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த விபரீத நிலையை எண்ணி எடுத்துச் சொல்லித் திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மில் தாமே அலுத்துக் கொண்டதும் உண்டு.

"குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆரணம் ஆயிரம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே".

இந்த நிலைமைக்காளாவதே என்றைக்கும் எம்மியல்பு போலும்!

சகத்திலே தானிருக்கும் உண்மையை, இலிங்கத் திருவுருவிலே தாமே தம்மைத் தோற்றியதன் மூலம் சிவபெருமான் புலப்படுத்திய பேரருட் பெருமையைச் சித்திரிப்பது சிவராத்திரியாகும்.

நாம் வெட்ட வெளியிலே நின்று அண்ணாந்து பார்க்கும்போது பரந்தகன்று குவிந்து உயர்ந்து காணும இப்பிரபஞ்ச வடிவம் என்ன வடிவம்? இமயமலை, பொ

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

### மானிப்பாய்வேலக்கை பிள்ளையார் கோயில்

சிவராத்திரி நிகழ்ச்சிகளில் திவ்விய ஜீவன சங்கத் தலைவர் திரு S. கனகரத்தினம் குழுவினரின் பஜனையும் நம சிவப்பிரகாசம் அவர்களின் சொற் பெருக்கும் இடம் பெறும். —

### வண்ணைச் சிவன் கோயில்

இன்று கொடியேற்ற விழா வழமையான சிறப்புடன் நிகழ்ந்தது அடியார்கள் பலர் வழிபாட்டில் ஈடுபட்டனர்,

### கோணேஸ்வரம் ஆலய மடத்திறப்பு விழா

திருக்கோணேஸ்வர ஆலய புதிய மடம் மாசி மீ 14 உ (26-2-1976) வியாழக்கிழமை காலை 8.00 — 9.00 மணிக்குள்ளாக வரும் சுபவேளையில், திரு ஆ. சின்னத்தம்பி ஜே பி (தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## மகா சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும், சைவ மகளிர் மன்றமும் நடாத்தும் மகா சிவராத்திரி விழா 28-2-76 சனிக்கிழமை இரவு சபையாரது நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (35, கல்லூரி வீதி) வெகு சிறப்பாக அனுட்டிக்கப்படும்.

விழா நிகழ்ச்சிகள்:

| | |
|---|---|
| இரவு 8-15 — 8-40 | கடவுள் ஆராதனை - விசேட பூசை (முதற் சாமம்) |
| 8-40 — 9-00 | ஆரம்ப உரை<br>திரு. த. சோமசுந்தரம் அவர்கள் (தலைவர், சைவபரிபாலன சபை) |
| 9-00 — 10-00 | வீணை இசை<br>செல்வி. லலிதாராணி தம்பிராஜா<br>செல்வி. பாபரா பாக்கியநாதன் |
| 10-00 — 10-10 | சிவராத்திரி மகிமை<br>செல்வி அமிர்தகௌரி சரவணமுத்து |
| 10-10 — 10-40 | விழா உரை |

(வளர்ச்சி 2ம் பக்கம்)

சைவபரிபாலன சபையார் 9-11-1975-ல் நடாத்திய

## இலங்கைச் சைவசமயபாடப் பரீட்சையில்

# அகில இலங்கைப் பரிசில் பெறுபவர்

### 10 ஆம் வகுப்பு

1. ரதி வேலுப்பிள்ளை (தங்கப்பதக்கம்) யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
2. கிருஷ்ணனந்தி சோமசுந்தரம், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை
3. சிவசுந்தரசோதி முத்துச்சாமி, சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

### 9 ஆம் வகுப்பு

1. அருந்ததி சிவசுப்பிரமணியம் (தங்கப்பதக்கம்) மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை
2. கனகாம்பிகை பாஞ்சான், கொஸ்லாந்தை தமிழ் மகாவித்தியாலயம்
3. இந்துமதி சிதம்பரப்பிள்ளை, வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

### 8 ஆம் வகுப்பு

1. சுடேசநந்தினி நடராஜா (தங்கப் பதக்கம்) வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### பூநகரி முழங்காவில் ஸ்ரீ செல்வ யோக சித்திவிநாயக

## சதுர்த்தி விழா

காலை அபிடேகாராதனையின் பின் 9 மணிக்கு நல்லை ஆதீன பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் கோவிலமைப்பும் புனித நகர் திட்டமும் என்ற பொருள் பற்றி கலந்துரையாடல் நிகழும். திரு. ம. ஸ்ரீ காந்தா அவர்கள் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் ஆ. கந்தையா காணி அதிகாரி திரு. எம். குலநாயகம், இராம சபைத் தலைவர் திரு. வை. வல்லிபுரம், சிவநெறிக் காவலர் க. கனகராசா ஆகியோர் கலந்துகொள்வர். —

நேயர் நெஞ்சம்

### கோயிலிலுமா ... ... ... ... ...

# குறைவான உடை?

ஐயா,

கண்டி - 'தலதா மாளிகை'க்கு 'மினி'யுடையுடன் எவரும் வரக்கூடாது என்றும் அப்படி வருவோருக்குக் 'குற்றம்' விதிப்பதாகவும் அண்மையில் ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் வாசித்தேன். மினியுடையை அணிபவருக்கு வேறு உடை அங்கு அணியக் கொடுப்பதாகவும் அறிந்தேன். கோவில் — ஆசாரம் — மரியாதை என்றவற்றை நோக்கும் எந்த மனிதரும் இதனை வரவேற்பரென நம்புகிறேன்.

எங்கள் கோவில்களில் (சைவ ஆலயங்கள்) இளம் பெண்கள் (பலர்) கேவலமாக உடையணிந்து கீழே உட்கார முடியாமற் சிரமப்படுகிறார்கள். பெற்றோரும் இதனைத் திருத்த முடியாமலிருக்கின்றார்கள்போலும். சிறுபிள்ளைகள் என்று பொருட்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் வயது வந்த பெண் பிள்ளைகள் இப்படி எங்கள் கோவிலுக்கு அலங்கோலமாக வரும் முறையைத் திருத்த இந்து இயக்கங்கள் முன்வருமானால் வரவேற்போம். இளம் ஆண்கள் அநேகமாகக் கால்மறைய உடை அணிந்தே கோவிலுக்கு வருகிறார்கள்.

"குகப்பிரியன்"

யாழ்ப்பாணம்,
15-2-76

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ மாசி மீ கரு-உ வெள்ளி

# ஆடை, அணி, அமைவு ஆலய வழிபாட்டில்.

உணவும், உடையும், உறக்கமும் வாழ்வுக் கின்றியமையாதன வென்பதுண்மை. நல்ல வண்ணம் வாழும் நெறியாளர் உண்பதிலும் உடுப்பதிலும் புனிதத்தையே மேற்கொள்வர் உறங்கும் பொழுதும் தூய சிந்தையுடனே இறைவனை எண்ணிக்கொண்டே துயில் செய்வர். ஆகவே உலகியலில் எதற்கும் ஒரு நெறியுண்டென்பது ஒப்ப முடிந்த துணிவு.

பொருந்தும் உணவு போலப் பொருந்தும் உடையும் மனித குலத்துக்கு மாண்பு கொடுக்கும். எனவே ஆடை அணியும் நெறியொன்று தொன்று தொட்டுத் தமிழகச் சால்பாயுள்ளது. ஆலய வழிபாட்டுக்குச் செல்லுவோர் ஊணிலும் உடையிலும் நனி புனிதமாயிருத்தல் விதி முறை என்று ஆகமகாலத்திலே பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு எடுத்துரைப்பது வழக்கம். சைவ பால பாடங்களும் போதங்களும் இவற்றைக் குறிப்பாகக் கூறும்.

புலாலுண்போர் ஆலயத்துக்குட் புகுத வொண்ணார். மனமே மறுக்கும். அவ்வாறே மேலங்கியுடனும், தலைப்பாகையுடனும், பாத அணியிட்டும் எவரேனும் கோயிலுக்குட் செல்லத் துணிவு கொள்ளமாட்டார். ஆனால் விபரீதம மேலோங்க நவநாகரிகம தலைக் கொள்ளக கலிகாலக் கோலமும் மாறி மாறி வர வர மயக்க நிலைக்கு வந்து விட்டது.

பண்ணிசையைக் கைவிட்டுத் தப்பிசையில நாட்டங் கொள்வதுபோல் ஆடை அமைப்பும அளவுக்கு கடந்து பாடாய்ப் பழுதடைந்து கேடாகும் கீழ் நிலைக்கு இறங்கி விட்டதென்று பலரும் மனங் கலங்குவதை எங்கும் காணக்கூடியதாயிருக்கின்றது.

நேயர் நெஞ்சத்தில் அன்பர் கழிவிரக்கமெய்தி வரைந்திருக்கும் கருத்தைச் சைவ மக்களும் சபைகளும் உற்று நோக்கி பிள்ளைகள் பெற்றிவாய்ந்த பாரம்பரிய ஆடை அணிவதற்குரிய வழிவகைகளைச் செய்வதவசியம.

ஆலயங்களில் அநேகமாக உடை எவ்வாறிருக்க வேண்டும் என்று விளம்பரப்பலகை வாயிலாக அறிவித்தல் செய்யப்படுவதுண்மை எனினும் மகளிர் தம மரபு ஆடை அணியைப் பற்றி இதுவரை குறிப்பிடப் படவில்லையாகையால் அறிவித்தல இன்றி இவ்வொழுக்கம் மேற்கொள்ளப்படுவதற்குப் பெற்றோரும ஆசிரியர்களும சைவ சபைகளும் உழைப்பதே உசிதமாகும.

# இலிங்கத்திலே தோற்றிய

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

தியமலை, சிவனொளி பாத மலை, அல்ப்ஸ் மலை, என்று பெயர்களிலே காணப்படும் பிரமாண்டமான பெரிய அக்கற்பாறை அருவங்கள் என்னவடிவம்? கயிலாயம் எனப்படுவது என்னவடிவம்? தோட்பட்டைவரை பரந்தகன்று அதன்மேல் ஒடுங்கி யுயர்ந்து இற்கும் நமதுயாக்கை வடிவம் என்ன வடிவம்? கொளுத்திவெரிக்கும்போதும் சுவாலை விட்டுக் கிளம்பி மேலெழுந் தெரிகின்ற அக்கினியின் வடிவம் என்ன வடிவம்? சிவபெருமான் தாமே தம்மைத் தோற்றிக் காட்டிய அதே இலிங்க வடிவுகள் தான் இவை யெல்லாம் என்ற உண்மையை அறிந்தவர்தான் அறிந்தவர் ஆவர்.

அகத்திலே, இருதய கமலத்திலே நிகாராசமாகிய இலிங்கமாய்த் தோற்றுகிற அதே பாங்கில் ஜகத்திலே மேற் குறித்தன போன்ற வடிவுகளெல்லாம் சிவபெருமான் தோன்றும் இலிங்க வடிவுகளேயாம். 'மானிட யாக்கை வடிவு சிவலிங்கம்' என்கின்ற திருமந்திர வார்த்தையும், 'விருப்புறு மங்கியார் விடையுயர்த்தவரே' என்ற பெரியபுராண வார்த்தையும் ஏர்தரு ... மீகதத எவ்வுருவும் ... வாய்' என்ற திருவாசகமும

# புண்ணியநாச்சி அம்மையார்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் மாசி 7 (19-2-76) அன்று வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் மேற்படி அம்மையார் பெயரால் அபிடேக ஆராதனையும் நடைபெற்றது

# சங்கீத கதாப்பிரசங்கம்

— 0 —

தைப்பிங், ஸ்ரீ தண்டாயுதபாணி கோயிலில் சங்கீத கதாப்பிரசங்கம் யாழ்ப்பாணம், திருப்பூங்குடி அன்புக்கடல் திரு. வி. வி. கே. ஆறுமுகம் அவர்கள் "முருகன் பெருமை' என்ற தலைப்பில் சங்கீத கதாப்பிரசங்கம் 18-2-1976 செய்தார்கள்.

x x x

# புராணப் படிப்பு பூர்த்தி விழா

ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ஸ்ரொற் ரூட், குவாலாலம்பூர். பெரிய புராணம், கந்த புராணப் படிப்பு பூர்த்தி விழா மாசி மாதம் 3-ந் தேதி (ஆங்கிலம் 15-2-76) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி முதல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

'திருநீலகண்ட நாயனாரும், கந்தவேள் காட்சியும்' பற்றி அன்புக்கடல் திருப்பூங்குடி வி. வி. கே. ஆறுமுகம் அவர்கள் சிறந்த சொற்பெருக்காற்றினர். (ந. வி.)

மகத்தான சிவரகசியங்களாம்.

பிரமாவும் விட்டுணுவும் அன்றொரு நாள் சிவனைத் தேடினர் அகழும் பக்கமும் தேடினர்.

மேலுங் கீழுந்தேடினர் எங்கும் கண்டிலர். அலுத்துக் களைத்துப் போய் ஆற்றாமை காரணத்தால் தமது அறியாமையே ஆராதனையாகக் கொண்டு மீள நினைந்தார்கள். அப்பொழுது,

"மைக்களமும் மாண்மழுவும்
வரதமுட னபயமுறும்
மெய்கரமும் நாற்றோளும்
விளங்குபணிக் கொடும்
பூணும்
செக்கரு மதிச்சடையும்
சேயிழையோர் பாகமுமாய்
முக்கணுற யாங்காண முன்
னின்றே யருள்புரிந்தான்"

என்ற வண்ணம், ஒரு இலிங்கத்தின் கண்ணே சிவபெருமான தானே தோன்றினான. மாசி மாசத்து அமாவாசைக்கு முன்னிரவில் மூன்றும் யாமத்தில் அந்நிகழ்ச்சி இடம்பெறலாயிற்று அவ்விரவே சிவராத்திரி. இந்த இலிங்கத் தோற்ற இரகசியமே சிவராத்திரி பற்றிய பகிரங்க இரகசியமாம்.

சிப்பி வாயில் விழுந்த மழைத்துளியொன்று மகத்தான முத்தாய் விளைந்தது போன்று, புராணத்தின் வாய்ப்பட்ட இச்சிறு செய்தி சிவலிங்க மாணபாகிய திவ்விய முத்தாய்ப் பொலிந்திலங்குகின்றது.

"இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினன்
பொங்கு நெஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே",
... ... ... ... கள

# சைவ பரிபாலன சபை சமயபாடப்

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

3. வசந்தமாலா மாப்பாணர், சோமாஸ்கந்த கலலூரி, புத்தூர்
2, கிருபாகரன் பொன்னுச்சாமி, நாவற்குழி மகாவித்தியாலயம்

## 7 ஆம் வகுப்பு

1. இளமதி நடராசா, மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை
2, ரவீந்திரன் நடராசா, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
3. செங்கதிர்ச் செல்வன் பொன்னையா, யாழ். இந்துக்கல்லூரி

## 6 ஆம் வகுப்பு

1. உஷா பாலசுப்பிரமணியம, கரம்பொன் சிறிய புஷ்பமகளிர்கல்லூரி
2. சாந்தனி சாமிநாதன, யாழ். இந்துமகளிர் கல்லூரி
3. சிவானந்தி சோமசுந்தரம் இராமநாதன் கலலூரி, சுன்னுகம்

## 5 ஆம் வகுப்பு

1. யாழினி நாகசிவாயம், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
சாந்தினி கணேஷ், புலோலி பருத்தித்துறை
2. சிவதயாளன சிவபாதசுந்தரம், அனுராதபுரம விவேகானந்த வித்
3. பிரியதர்ஷினி சரவணபவானந்தன, யாழ இந்துமகளிர் கல்லூரி
திருமகள கந்தசாமி, காரை. சுந்தரமூர்த்தி வித்தியாலயம

## 4 ஆம் வகுப்பு

1. கோடீஸ்வரன் ஆறுமுகம், காரை, சுந்தரமூர்த்தி வித்தியாலயம்
2. கமலராணி சதாசிவம காரை சுந்தரமூர்த்தி வித்தியாலயம
3, ஆனந்தராசா சேனதிராசா, யாழ் தட்டாதெரு இ. த. க. வி.
ஸ்ரீதமாரன குமாரசாமி, அனுராதபுரம விவேகானந்த வித்தியாலயம்

## 3 ஆம் வகுப்பு

1. நளாயினி சிறினிவாசகம யாழ். நல்லூர் இ. த. க. வித்தியாலயம்
ஜெயந்திதேவி யோகீஸ்வரன, யாழ். இந்துமகளிர கலலூரி
2. பிரபாங்கன சுந்தரலிங்கம, அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம
3. மணிவண்ணன் நடேசன, நவாலி அமெரிக்கன் மிஷன் ரோ. க பாடசாலை

சைவ பரிபாலன சபை, சி. சிவரத்தினம்,
யாழ்ப்பாணம் 15-2-76. பரீட்சைக் காரியதரிசி.

# மகாசிவராத்திரி வழிபாடு

(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

| | |
|---|---|
| | திருமதி கெதயசநாயகி கருணைநந்தன் |
| 10-20 — 11-20 | திருமதி ஜெகதீஸ்வரி யோகரத்தினம் |
| | செல்வி மிதிலா யோகரத்தினம் |
| | செல்வி வாசுகி மகாரத்தினம் |
| | செல்வி ஜெயமாலா இரங்கநாதன் |
| | செல்வி நிரஞ்சினி ராதாக்கிருஷ்ணன் |
| 11-20 — 12-00 | திருமுறைப் பண்ணிசை |
| | திருமதி இராஜேஸ்வரி பொன்னம்பலம் |
| 12-00 — 12-20 | இலிங்கோற்பவ காலம் — |
| | இரண்டாம் சாமம் |
| | கடவுள் ஆராதனை, விசேட பூசை |
| 12-20 — 1-00 | பரதநாட்டியம |
| | செல்வி மீனா பரம் தில்லைராஜா |
| | செல்வி தமயந்தி பரம்தில்லைராஜா |
| 1-00 — 1-30 | வில்லிசை விருந்து |
| | — யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் |
| 1-30 — 2-00 | சிவபுராணம் ஓதல் |
| | சைவமகளிர் மன்ற உறுப்பினர்கள் |
| 2-00 — 3-00 | திருமுறை ஓதல் |
| | — சைவமகளிர் மன்றம் |
| -00 — 3-15 | கடவுள் ஆராதனை — மூன்றும் சாமம் |
| | விசேட பூசை |
| 3-15 — 5-15 | புராணபடனம் |
| | " அடிமுடி தேடு படலம் " |
| 5-15 — 5-30 | நன்றியுரை |
| 5-30 — 5-40 | கடவுள் ஆராதனை — நான்காம் சாமம் |
| | விசேடபூசை |

தேவாரம் விபூதிப்பிரசாதம் வழங்கல்

சிவராத்திரி விரத அன்பர்களையும்
சைவாபிமானிகளையும்
சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை
25-2-76 சைவமகளிர் மன்றம்

# யாழ். அரசினர் வைத்தியசாலை வைரவர்கோயிலில் சிவராத்திரி வழிபாடு ( 28-2-76 )

யாழ் அரசினர் வைத்தியசாலை வளவில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோவிலில் சிவராத்திரி வழிபாடு (28—2—1976) சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு ஆரம்பமாகும்.

நான்கு யாமமும் விசேட அபிடேகமும் பூசையும் நிகழும். இரவு 7-மணி முதல் ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் திருவுருவப்படம் திருவீதி வலம் வருதலும் அடுத்து பிணியாளர்களின் வழிபாட்டிற்காக சிகிச்சை பெறும் அறைகளுக்கு சிவனடியார்களது பஜனையுடன் உலா வரும் அருள்நிகழ்ச்சியும் வழமைபோல நிகழும்.

யாழ். மத்திய கல்லூரி இந்துமாணவர் மன்றமும், யா. நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகமும் பஜனைப் பணியை நடாத்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும்

## சித்தாந்தத் தேர்வுகள் 1974—1976 தேர்வு விதிகள்

(முன் வளர்ச்சி — 5)

### சித்தாந்த பிரவேச பண்டிதர்

(3) திருமுறை

1. 'தோடு - கூற்று - பித்தா' என்னும் தொடக்கத்துத் தேவாரப் பதிகங்கள் - உரை.
2. திருக்கேதீசுவர திருக்கோணேசுவரத் தேவாரப் பதிகங்கள், வச்சிரவேலு முதலியார், வித்துவான் சுப்பையாபிள்ளை - உரை (யாழ் கூ. த. ப. வி. க வெளியீடு)
3. திருவாசகம் - திருச்சதகம் 1—50 பாடல் உரை
4. திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி - உரை
5. பெரிய புராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்

(4) சாத்திரம்

(அ) ஆழப்படிப்பு:

1. திருவருட்பயன் — க. வச்சிரவேலு முதலியார்
2. உண்மை விளக்கம் — க வச்சிரவேலு முதலியார் உரை (யா, கூ. த. ப. வி க. வெளியீடு)

(ஆ) அகலப்படிப்பு:

1. வினாவெண்பா — உரை (அ இ சை, பு. சங்க வெளியீடு)
2. உண்மைநெறி விளக்கம் — உரை (அ இ சை, பு. ச. வெளியீடு)
3. கொடிக்கவி — உரை (வ, மா; சை இ மா, ம வெளியீடு)
4. சிவஞானபோதம் 1 — 2 சூத்திரங்கள் - மனனம்

(வளரும்)

## பசுக்களைப் பராமரித்துச் சிவபூசை செய்த சண்டேசுர நாயனார்

[சிவஸ்ரீ க. லோகநாதசர்மா அக்கரைப்பற்று]

(முன் வளர்ச்சி -4)

பசுவினது உடம்பெங்கும் தேவர்கள் வசிக்கிறார்கள்.

"சதுஷ்பாதம் வேதரூபம் அக்னிரூ ஞ்சசிறுங்ககம்
ஆதித்யசந்ர நேத்திரஞ்ச முகமருத்ர மயமத்தா
ப்ரமாவிஷ்ணுச் சருத்திரச்ச சர்வதேவ மய
விருஷப்'

அதாவது நான்கு கால்களும் நான்கு வேதங்கள். கொம்புகள் அக்கினியின் வடிவம். முகம் உருத்திரனின் அம்சம் இரண்டு கண்களும் சூரிய சந்திரர்கள் பிரமா விட்டுணு முதலான தேவர்கள் உடம்பு எங்கணும் வசிக்கிறார்கள் இவ்வாறான பசுக்களை வதை செய்வது பெரும் பாவம்.

"பசுக்கள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத் தரும் அவற்றைக் கட்டும் இடங்களில் தூபதீபங்கள் ஏற்றல் வேண்டும்; சிறிதும் வருத்தம் செய்யாது இரக்கத்தோடும் இயக்கல் வேண்டும்" என்று நாவலர் பெருமான் நான்காம் பால பாடத்திற் கூறியுள்ளார்.

இச் சண்டேசுர நாயனார் இதை உணர்ந்தவராதலின் அவ்விடையன் பசுவை அடிக்கக் கண்டு பொறாராகிக் கோபித்து அவனை விலக்கி தாமே அவன் தொழிலைச் செய்து வந்தார். அதனால் பசுக்கள் மேலும் விருத்தியாகி முன்னிலும் அதிகளவு பாலைக் கொடுத்தன.

சிவபூசை, ஆன்மார்த்த பூசை பரார்த்த பூசையென இரண்டு வகைப்படும் ஆன்மார்த்தபூசை தனக்காகவும் பரார்த்தபூசை பிறருக்காகவும் செய்யப்படுவது.

இறைவன் எமக்கு இச் சரீரத்தைத் தந்தது தலை வாழ்த்த, நினைக்க, வீழ்ந்து வணங்க என்று அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

"வாழ்த்த வாயும்
நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந்
தந்த தலைவனை
சூழ்த்த மாமலர்
தூவித்துதியாதே
வீழ்த்தவா வினையே
நெடுங்காலம்"

என்று தம்மை நொந்தும் சொல்கிறார். (வளரும்)

## "கலைகளிற் சிறந்தது இலக்கியமே"

கி. வா. ஜ. கருத்து

கலைகளிற் சிறந்தது இலக்கியம் அது பயனும் 'நயமும் உடைத்து" இவ்வாறு "தமிழும் சமயமும்" பொருள் பற்றி யாழ். வளாகத்திலே 12-2-76 ல சொற்பொழிவாற்றிய பிரபல தமிழறிஞரும் கலைமகளாசிரியருமான திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் குறிப்பிட்டார் தமிழிலக்கியத்தின் பல்வேறு காலப் பகுதிகளைச் சேர்ந்த பாடல்கள் மூலம் கவிதை நயத்தினையும் சமயச் சிறப்பினையும் ஒருங்கே இணைத்துக் காட்டினார். இக்கூட்டத்திற்கு ஆங்கிலப் பேராசிரியர் சிவஸ்ரீ கா கைலாசநாதக் குருக்கள் தலைமை வகித்தார்

"பூக்கைக் கொண்டரன்
பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன்
நாமம் நவிலலார்
ஆக்கைக்கே இரை
தேடியலைந்து
காக்கைக்கே இரை
யாகக் கழிவரே"

இவர்கள்,

"பெருநோய்கள் மிக நலியப்
பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி
யிறக்கின்றாரே"

என்று சிவபூசை செய்யாத மற்றவர்களையும் நொந்து கொள்கிறார். (வளரும்)

## தாயின் சிறப்பு சாலப் பெரியது

[செல்வன் க. குமாரதேவன், மகாஜனக் கல்லூரி]

அன்பிற் சிறந்தது தாயன்பு. பாசத்தால் உயர்ந்தது தாய்ப்பாசம். இதனாலன்றோ நம் முன்னோர்கள்

"தாயினிற் சிறந்தொரு கோயிலுமில்லை'

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

"மாதா பிதா குரு தெய்வம்"

என்றெல்லாம் கூறிப் போந்தார்கள்.

ஆண்டவனைக் கூட எம் சைவ சமய அடியார்கள் தாயாகப் போற்றியே வழிபட்டிருக்கின்றனர் என்பதை

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"

"தாயினிற் சிறந்த தயாவான தத்துவனே'

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'

என்ற மணிவாசகப் பெருந்தகையின் கவின் மொழிகளாலும் நன்கு அறிய முடிகின்றது.

தலையால் நடந்து கைலையை நோக்கிச் சென்ற காரைக்காலம்மையாரை எம்பெருமான் "அம்மையே" என்று விழித்தழைக்க அம்மையார் எம்பெருமானை "அப்பா" என்று அழைப்பதாக பெரிய புராணத்தின் மூலம் அறிய முடிகின்றது.


இதனால் தாய்மையின் சிறப்பையும், பெருமையை நனகு அறியக் கூடும்.

உலகிலே தாயில்லாமல் எந்த ஜீவராசிகளும் பிறப்பதில்லை உலகிற் பிறக்கும் எந்தக் குழந்தையும் முதன் முதலவாய் திறந்து அம்மா என்று தான் அழைக்கின்றது அம்மா என்பது தமிழ்ச் சொல் எந்த மொழியினை எடுத்தாராய்ந்தாலும் குழந்தை தாயை அழைக்கும் சொல்லில் அம்மா என்ற சப்த ஒலி விரவியிருப்பதை ஆராய்ந்தறியலாம்.

மக்களுக்குப் பயன் தந்து வாழ்விப்பதும் எல்லாவற்றையும் பெண்ணாகவும், தாயாகவும் உருவகித்தும் போற்றியும் வருவது நந்தமிழர் பண்பாகும்.

நமக்குரிய நாட்டைத் தாய்நாடு என்கின்றோம். நாம் பேசும் மொழியைத் தாய்மொழி என்று மகிழ்ச்சியோடு அழைக்கின்றோம். நிலத்தை நிலமகள் நிலமடந்தை என்றும் பூமியைப் பூமாதேவி என்றும் அழைக்கின்றோம். செல்வக் கடவுளை இலக்குமி பூமகள், திருமகள், தாமரைச் செல்வி போன்ற சொற்களால் குறிப்பிடுகின்றோம். வீரக் கடவுளை துர்க்கை, காளி, கொற்றவை முதலிய பெயர்களால் அழைக்கின்றோம். (வளரும்)

## "அரைக்காசுக்குப் போனது... ஆயிரங் காசுக்கும் வாராது ... ...!



பத்தர்: "கெடுகுடி சொற்கேளாது" என்பது புதுமொழியல்ல; நமது பெண்பிள்ளைகளுட் சிலரது ஆடைக்குறைப்பு அலங்கோலம் 'சீ' என்று தூற்றுமளவுக்குவந்திருக்குது! மதிப்புவாய்ந்த 'மகளிராண்டு கண்ட...... மணிகள்' தமிழன் மானத்தைக் காக்க முன்வரக் கூடாதா? ஒவ்வொரு தந்தையுந் தாயும் -சகோதரரும் தம் பாரம்பரியம் மிக்க சால்பைப் பேணுவது தம்கடமையென்று உணர்ச்சி கொள்ளவேண்டும். அவர்தம் உள்ளமெல்லாம், ... "என்று தணியும் இ(ழி)ந்த **உடைகளின் மோகம்?** என்றகீதம் இசைக்கவேணும்! இந்த நிலைமை உருவாகாதா?

சித்தர்: "அரைக் காசுக்குப் போன மானம்—ஆயிரம் காசு கொடுத்தாலும் திரும்பி வராது" என்ற பொன்மொழி எம் மாதர் திலகங்களின் சிந்தனைக்குரியது! நாட்டின் பஞ்ச நிலைதான் உடை சிறுப்புக்குக் காரணமா? நாகரிகமோகமா? என்பதை ஆராய்ந்து. அன்ன நடை நடக்கப் போய் - தனது நடை கெட்டுத் தடுமாறித் தவிதவிக்கும் நம் பருவமங்கை மாமணிகளைக் கைதூக்கிவிடத் தாய்க்குலம் முன்னணிக்கு வரவேண்டும்? அறிஞர்களும் மன்றங்களும் ஆக்கபூர்வமான ஒத்தாசை வழங்கட்டும்! தாய்க்குலம் - பேய்க்கோலமாகச் செல்லாமலிருக்கட்டும்.

— 'நயன்மார் - நாதன்'

## சொற்பொழிவுகள்

தமிழகத்திலிருந்து அண்மையில் எமது நாட்டிற்கு விஜயம்செய்த திரு. சந்தானராமன தம்பதிகள் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்திலுள்ள இசைக்கலை மன்றத்தின் சார்பிலே சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் திரு சந்தானராமன "கந்தபுராண மகிமை" என்னும் பொருள்பற்றிப் பேசுகையிலே, 'தமிழகத்திலும் பார்க்க யாழ்ப்பாணத்திலே கந்தபுராணம் நன்கு போற்றப்படுகிறது' எனக் குறிப்பிட்டுக் கந்தபுராணத்தில் உள்ள கவிதைநயம், சொல்நயம், விஞ்ஞானக்கருத்துகள் அறவுரைகள் பற்றி நன்கு எடுத்துக் கூறினார்.

திருமதி ஹேமா சந்தானராமன் அவர்கள் "பாரதி கண்ட தெய்வம்" எனும் பொருள்பற்றிப் பேசுகையிலே, 'பாரதி பல தெய்வங்களைப்பற்றி பாடியுள்ளாரெனினும் குறிப்பாகப் பராசக்தியிலே அவருக்கு மிக்க ஈடுபாடு இருந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

## கருத்தரங்கு

ஆக்க இலக்கிய எழுத்தாளர்களுக்கான கருத்தரங்குத் தொடர் மாசி 17-ம் திகதி யாழ். வளாகத்திலே தொடங்கிற்று ஆரம்பத்திலே வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் இவ்விடயம் குறித்துக் கருத்துரை வழங்கினர் இவரைத் தொடர்ந்து திரு இராஜ சிறீகாந்தன், திரு கே சோமசுந்தரம் முதலியோர் இக் கருத்துரையிற் பங்கு பற்றினர். இக் கருத்தரங்கு ஒழுங்குகளைச் செய்த திரு ... அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## சிவராத்திரி விழா

யாழ் சிறைச்சாலை முருகன் கோவிலில்

28-2-76 சனிக்கிழமை பி. ப 3 மணி முதல் விசேட அபிடேகஆராதனையுடன் சிவராத்திரி விழா நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையுடன் "சிவராத்திரி வழி பாடு" என்னும் பெரும் பொருள் பற்றிச் சைப்புலவர் திரு வ. கந்தசாமி ஆசிரியர் உபந்தியாசம் நிகழ்த்துவார் இவ்வாலயத்தில் ஞாயிறு தோறும் காலை 8 மணி முதல் விசேட பூசை உபந்நியாசம் என்பன நடைபெறுகின்றன பலசைவ சமயக் கைதிகள் கலந்து பயன் அடைகிறார்கள்.

x x x

தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிச் சைவ வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் அமைந்திருக்கும் ஸ்ரீ சிவகாமி சமேத ஆனந்த நடராசர் ஆலயத்தில் 28-2-76 அன்று சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும். அன்று காலை சமயதீட்சையும் இடம் பெறும்.

வேலணையில்

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவிலடியை சார்ந்த இந்து இளைஞர்கள் 28-2-76 சனிக்கிழமை சிவராத்திரி விழாவினை ஆலய முன்றலில் வெகு விமரிசையாக கொண்டாட உள்ளனர்.

அன்றைய நிகழ்ச்சியில் உள்ளூர் வெளியூர்பெரியார்கள்சொற்பொழிவு, கருத்தரங்கு, அடிமுடி தேடும் படலம் எனும் வில்லிசை நிகழ்ச்சியும் நடாத்தபடும்,

சாந்தையர்மடத்தில்

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 21வது ஆண்டு நிறைவு விழாவும் சிவராத்திரி விழாவும், 28-2-76 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் நிகழும். கந்தபுராண பாராயணம், பண்ணிசை, சொற்பொழிவுகள் என்பன நடைபெறும்.

அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்

யா. அரியாலை இளைஞர் ஐந்தாமாமன்றத்தினர் சிவராத்திரி விழாச் சார்பில் யா அ. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மாலைப்பூசையைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து பசனைஊர்வலம் நடாத்தவுள்ளனர். சிவராத்திரிவழிபாடும் பண்ணிசைவிருந்து கூட்டுவழிபாடு ஆகிய நிகழ்ச்சிகளும், நான்கு யாமமும் விசேட பூசை அபிடேகம் ஆதியனவும் இடம்பெறும்.

வவனிக்குளம் சிவாலயத்தில்

பாலிநகர் என்னும் பழைய நாமங்கொண்ட வவனிக் குளத்திலேயுள்ள சிவபுரம் சிவாலயத்திலே சைவப் புலவர் பிரமஸ்ரீ வை. இராமகிருஷ்ணஐயர் அவர்களும், சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் மு. வி. மகாலிங்கம் அவர்களும் சிவராத்திரி தினத்திலன்று சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். இணுவில் சபா சதாசிவம் குழுவினர் பக்த அருணகிரிநாதர்' எனும் பொருளில் வில்லிசைநிகழ்ச்சிநடாத்துவார்கள். ம. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

பரகதி உண்டெனை இல்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்,
இரகதி செய்திடு வார்கடை தோறும்,
துரகதி உண்ணத் தொடங்குவர் தாமே.

Those who deny the existence [of heavenly Bliss, they go to hell. The world knows this. They become beggars seeking for alms from door to door. They roam about in search of food like (abandoned) horses:

Hindu Organ

FRIDAY, FEBRUARY 27, 1976

# Promising Step Toward Prohibition

THE Minister of Finance must be congratulated on his decision to accede to the repeated requests of the Members of Parliament representing the Kalmunai, Rambukkana and Matugama Electorates in the National State Assembly calling for total prohibition in their areas. The Government Agents also pleaded for this urgent step as the evil of intemperance had been growing worse. Religious Associations in these districts have been clamouring for the removal of taverns for a long time. It is, therefore, gratifying to note that the Ministry of Finance has realized the gravity of the ill effects of liquor taverns.

We hasten to make use of this opportunity to refer the Minister to the agitation for Total Prohibition throughout the Island by different societies and more particularly to the opinion expressed in the press in favour of Temperance.

When recently it was ruled that licences for liquor shops should not be granted if they happened to be within a stone's throw of a temple or an educational institution, we suggested that the question of enforcing Total Prohibition must be examined by the Minister with a view to driving away the menace of alcoholic drinks.

It is to be hoped that the M. Ps of the remaining electorates would now take the helpful hint and bring to bear on the Minister sufficient pressure to ensure the extension of the limited prohibition to the rest of the Island. That alcohol is enemy number one in the war against culture, is a universal fact. Where society becomes tainted by evil ways of living, the result would be its ruin.

The case for Prohibition need not be argued at length. Even the confirmed addict to alcohol will not deny the fact that his pathetic plight is due to there being no governmental regulation to prevent the use of liquor. Religious Associations always have 'prohibition' on the priority list of activities as religiousness needs the elimination of all evil habits. They should now present their view on this subject to the Minister.

## STABIPSS

### First Undergraduate Publication From The Jaffna Campus

*STABIPSS* the first annual publication of the science students' union (consisting of undergraduates offering Statistics Biological and Physical Sciences) was officially released on the 16th February, in the Thirunelvely premises of the Jaffna Campus. This is also the first publication of the undergraduates of the Jaffna Campus. It carried important articles and research papers mostly from Professors, lecturers and students of the Jaffna Campus. At the publication meeting, the President, the Deans, some lecturers and the president and secretary of the science union of the Jaffna Campus participated. Many of them hailed the publication for its academic standard and varied interests.

## University T. A. (Jaffna Campus)

At the annual general meeting of the University Teachers' Association, Jaffna Campus held recently the the following were elected office-bearers for the year 1976.

President: Prof. V. K. Ganesalingam

Vice-President: Mr. M U. de Silva

Joint Secretaries: Dr. A. Shanmugadas, Mr. S. Ganesalingam

Treasurer: Mr. E. Muthuthamby

Members: Prof. K. K. Kurukkal, Dr. J. B. Selliah, Miss K Vallipuram, Mrs. S. Maunaguru, Mr. J. Sathiyadas and Mr Herath Banda.

## First Cross Country Race at the Jaffna Campus

The first cross country race at the Jaffna Campus was held on the 14th February. About 30 undergraduates participated. Mr. S. K Senaratna came first in the race and was awarded the challenge cup presented by Mr S. Kanagarajah proprietor Milk White Soap works Prof. P. Kanagasabapathy the Dean of the Faculty of Science was the chief guest at the function and gave away the prizes.

# Kalayogi Ananda K. Cumarasamy On Indian Music

(Continued from last issue)

Since Indian music is not written, and cannot be learnt from books, except in theory, it will be understood that the only way for a foreigner to learn it must be to establish between himself and his Indian teachers that special relationship of disciple and master which belongs to Indian education in all its phases: he must enter into the inner spirit and must adopt many of he outer conventions of Indian life, and his study must continue until he can improvise the songs under Indian conditions and to the satisfaction of Indian profes sional listeners. He must possess not only the imagication of an artist, but also a vivid memory and an ear sensitive to micro tonal inflections.

The theory of scale is everywhere a generalisation from the facts of song. The European art scale has been reduced to twelve fixed notes by merging nearly identical intervals such as D sharp and E flat, and it is also tempered to facilitate modulation and free change of key. In other words, the piano is out of tune by hypothesis. Only this compromise, necessitated in the development of harmony, has made possible the triumphs of modern orchestration. A purely melodic art, however, may be no less intensely culti ated, and retains the advantages of pure intonation and modal coloring.

Apart from the keyed instruments of modern Europe there scarcely exists an absolutely fixed scale: at any rate, in India the things fixed is a group of intervals, and the precise vibration value of a note depends on its position in a progression, not on its relation to a tonic. The scale of twenty-two notes is simply the sum of all the notes used in all the songs—no musician sings a chromatic scale from C to C with twenty-two stopping places, for this would be a mere *tour de force*.

The 'quarter-tone' or *shruti* is the microtonal interval beween two successive scale notes: but as the theme rarely employs two and never three scale notes in succession, the microtonal interval is not generally conspicuous except in ornament

Every Indian song is said to be in a particular *raga or ragini*—ragini being the feminine of raga, and indicating an abridgement or modification of the main theme. The raga, like the old Greek and the ecclesiastical mode, is a selection of five, six, or seven notes, distributed along the scale; but the raga is more particularized than a mode, for it has certain characteristic progressions, and a chief note to which the singer constantly returns. None of the ragas employs more than seven substantive notes, and there is no modulation: the strange tonality of the Indian song is due to the use of unfamiliar intervals, and not to the use of many successive notes with small divisions.

The raga may be best defined as a melody-mould or the ground plan of a song. It is this ground plan which the master first of all communicates to the pupil; and to sing is to improvise upon the theme thus defined.

( To be continued )

## AUCTION SALE

All the unredeemed Jewelleries pawned with Mr. K. Kandasamy, Licensed Pawn Broker of Sakkalavodai Karainagar East from 1-2-72 till—31-1 75 will be sold by Public Auction by me at the above shop on 7th April 1976 commencing at 10 a. m.

**V. Erampamoorthy**
Licensed Auctioneer.

Karainagar
9-2-75
(39. 20 & 27)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday February 27, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org